திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த சர்ப்ளஸ் லாண்ட் எவ்வளவு இருக்கிறது என்று இந்திய அரசு நம்மிடம் கேட்க காரணம் என்ன ? பப்ளிக் டிரஸ்ட், ரிலிஜியஸ் டிரஸ்ட்களல்லாம் 20 ஏக்கருக்கு மேல் விளை நிலங்களை வைத்திருக்கக் கூடாது என்ற பிரிவு இருக்கிறது. அதை அமுல் செய்வதில் கஷ்டங்கள் ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசாங்கம் ஓர் ஆலோசனைக் குழு அமைத்து, குழுவின் கொள்கைகளை மாநில அரசு எந்த அளவுக்கு அமல் செய்திருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்வதற்காக விவரம் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் உரிமையோடு கேட்கவில்லை. நாமும் அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. மத்திய அரசு அதைப் பற்றி விவரம் அறிந்து கொள்ள வேண்டுமென்ற முறையில் கேட்டதால் அனுப்பப்பட்டிருக்கிறது. ரிலிஜியஸ் டிரஸ்டுகளைப் பொறுத்த வரை 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் சொந்தப் பயிர் வைக்கக்கூடாது என்ற விதி இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இது வரையில் யாருக்கும் அப்படி 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் சொந்தப் பயிர் வைக்க விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. ஆனால் இதற்கு முன்னால் இருந்த அரசு பல பேருக்கு நூற்றுக் கணக்கான ஏக்கருக்கு, ஆயிரக் கணக்கான ஏக்கருக்குக்கூட சொந்தப் பயிர் வைப்பவர்களுக்கு விதி விலக்கு அளித்திருக்கிறது. விதிவிலக்கு அளிக்க சட்டத்தில் இடம் இருக்கிறது.

மேற்கு இராமநாதபுரம் பகுதியில் புதிய தொழில்கள்.

*94 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேற்கு இராமநாதபுரத்தையும் தொழில் துறையில் பின்தங்கிய பிரதேசமாக அறிவிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிதி வழங்கு நிறுவனங்களிடமிருந்து சலுகை வீதங்களில் நிதி உதவி பெறுவதற்காக, இராமநாதபுரம் மாவட்டம் முழுவதையும் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக மத்திய அரசின் திட்ட ஆணைக்குழு முன்னரே அறிவித்துள்ளது.

புதிய தொழில்களைத் தொடங்குவதற்காக 10 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுள்ள பகுதிகளில் மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்த்துக் கொள்ளலாம் என இந்திய அரசின் திட்ட ஆணைக்குழுவிற்கு இந்த அரசு பரிவுரை செய்துள்ளது.

துணி ஆலைகளுக்கான அன்னிய செலாவணி.

*95 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவுளி மில்களை நவீனமயமாக்கும் திட்டத்தினை அமுல்படுத்துவதற்குத் தேவைப்படும் அன்னிய செலாவணி குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1973 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லே.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லே.

திரு. கே. ஏ. வகாப் : ஜவுளி மில்கள் நவீனமயமாக்கப்பட்டால் இப்போதுள்ள இந்தக் கஷ்டங்களும் வேறு பல சிக்கல்களும் குறையும் என்று நிபுணர் குழு ஆலோசனே சொல்வதாக அறியப்படுகிறது. அப்படி யானுல் அதுபற்றி இனியாவது அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசு நடத்துகிற ஆலேகளேப் பொறுத்தவரையில் அப்படிப்பட்டதொரு முயற்சி நடத்தப்பட்டு வருகிறது, மாடர்னேசேஷன் ஆஃப் தமிழ்நாடு டெக்ஸ்டைல் மில்ஸ். ஆனுல் கூட்டுறவு மில்லைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அது புதிய ஆலேகளாக இருக்கின்றன. தனியார் துறையைப் பற்றி தகவல் இல்லே.

Rice seized at Pichanur.

*96. Q. —:THIRU N. DENNIS : Will the Honourable the Minister for Food be pleased to state :

(*a*) whether it is a fact that a large quantity of smuggled rice has been seized from the Rice Mills at Pichanur area in Coimbatore district during August 1972 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : (அ) அண்டு (இ) : காய்ந்த கருப்பந் தோகையின் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 அரிசி மூட்டைகளும் (ஒவ்வொரு மூட்டையும் சுமார் 75 கிலோ கிராம் எடையுள்ளது) 56 அரிசி அரை மூட்டைகளும் (ஒவ்வொரு மூட்டையும் சுமார் 40 கிலோகிராம் எடையுள்ளது) பிச்சானூரில் திரு. மயில்சாமி கவுண்டரின் அரிசி ஆலேக்கு அண்மையில் அவரது வளவிற்குள்ளிருந்து 10—8—1972-ல் கைப்பற்றப்பட்டன. மேற்படி மூட்டைகள் குறித்து எவரும் உரிமை கோராத காரணத்தால், மேற்படி மூட்டைகள் உரிமை கோரப்படாத பொருள்கள் என அறிவிக்கப்பட்டு பறிமுதல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. என். டென்னிஸ் : என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? அவை என்ன ஸ்டேஜில் இருக்கின்றன.?

மாண்புமிகு திரு மன்னே பா. நாராயணசாமி : பறிமுதல் செய்யப் பட்டது. யாருடைய ப்ராப்பர்டி என்று தெரியாததால் சர்க்கார் சரக்கை எடுத்துக் கொண்டு விட்டுவிட்டார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கடத்தல் அரிசி பறிமுதல் செய்யப்படும்போது அதற்கான ரசீதைப் பறிமுதல் செய்கிற அதிகாரிகள் கொடுப்பதில்லை. அகவே அதற்கான கணக்குகள் இந்தத அரசாங்கத்தினிடம் இல்லை. எனவே இனிமேலாவது பறிமுதல் செய்கிற அரிசிக்கு உடனடியாக ரசீது வழங்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அரசு தாக்கீது அனுப்புமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தக் கேள்விக்கும் அவர்கள் சொல்வதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் சொல்வது வேறு. காய்ந்த கருப்பந்தோகையின் அடியில் மறைத்து அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாக இலாகாவிற்கு அறிவித்து அவர்கள் சென்று சோதனை செய்து எடுத்திருக்கிறார்கள். அந்த மூட்டைகள் குறித்து எவரும் உரிமை கோராததால், அவை யாருக்குச் சொந்தம் என்று தெரியாததால் யாருக்கு ரசீது கொடுப்பது என்று தெரியவில்லை. வழக்குப் போடமுடியாமல் மூட்டைகளை மட்டும் பறிமுதல் செய்து வைத்திருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir.

MR. DEPUTY SPEAKER : No point of Order, during question-hour. Honourable Members must realise the importance of the question hour and should have the reduced the number of questions in the beginning itself. I have to allow 25 or 30 supplementaries for every question.

Sales centres of Food Corporation.

* 97. Q. : THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Honourable the Minister for Food be pleased to state :

(*a*) whether the Government is aware of the plan of the Food Corporation to open (1) wholesale and (2) Retail shops in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி : (அ) &(இ) : வெளிச்சந்தையில் நிலவுகின்ற விலைகளைக் கருத்திற்கொண்டு இந்திய உணவுக் கழகம் வரையறுக்கும் விலைகளில் கோதுமை, சோளம், பருப்பு வகைகள் ஆகியவற்றை விற்பனை செய்ய அக்கழகம் சென்னை நகரில், மொத்த விற்பனை நிலையம் ஒன்றினைத் தொடங்கியிருந்தது.

Tourist Traffic Advisory Committee.

* 98. Q. : THIRU K. T. K. THANGAMANI : Will the Honourable the Minister for Backward Classes be pleased to state :

(*a*) whether it is a fact that a Tourist Traffic Advisory Development Committee has been formed in Tiruchirappalli,

(*b*) if so, the names of its members ; and

(*c*) whether a statement will be laid on the Table of the House on the working of similar Committees in Madurai and Ooty ?